**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC No.157/2016**

Deposition of the witness for Prosecution **PW** 2
Name : **கணேஷ்குமார்**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (03.11.2025)

A1, A2 present, A3 absent,

முதல் விசாரணை

1. நான் ராஜபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். மரவியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது சித்தப்பா. ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 2.1.2012 ம் தேதி எதிரி யோவான் மற்றும் மூவர் காரில் வந்து செங்கோட்டை பிரானுர் பார்டரில் உள்ள சாமில்லை போட்டோ எடுத்ததாக வாட்ச்மேன் முருகையா எனக்கு தகவல் சொன்னார். எதிரி யோவான் முதலில் என்னிடம் டிரைவராக வேலை பார்த்தார். அதன்பின்னர் அவரை வேலையைவிட்டு நிப்பாட்டிவிட்டோம். அன்றைய தினம் எதிரிகள் எங்களை கேட்காமல் போட்டோ எடுத்ததுதான் பிரச்சனை. இதுசம்மந்தமாக அ.சா.1 புகார் கொடுத்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு சம்பவம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். யோவான் தவிர வேறு யார் யார் வந்தார்கள் என்று குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் சரிதான். யோவான் மட்டும்தான் தெரியும் வாட்ச்மேனுக்கு தான் அன்று நடந்த விவரம் தெரியும் என்றால் சரிதான். அதேபோல் பக்கத்தில் உள்ள நபர்களுக்கும் தெரியும் என்றால் தெரியும். அதிக பேர் பார்ப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை, எதிரிகள் சம்பவ இடத்திற்கு வரவில்லை, ஒரே ஊர் என்பதால் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியில்லை.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct. S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.11.03 15:19:16 +0530

District Munsif cum Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC No.157/2016**

Deposition of the witness for Prosecution **PW** 1
Name : **ராதாகிருஷ்ணன்**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (03.11.2025)

A1, A2 present, A3 absent,

<u>முதல் விசாரணை</u>

1. நான் ராஜபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மரவியாபாரம் தொழில் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 02.01.2012 ம் தேதி செங்கோட்டை பார்டரில் எனக்கு சொந்தமான சாமில் உள்ளது. அந்த சாமில்லில் எதிரி யோவான் டிரைவராக வேலை செய்தார். சில பிரச்சனை ஏற்பட்டதால் எதிரியோவானை வேலையிலிருந்து நிறுத்திவிட்டோம். அதனால் 02.1.2012 ம் தேதி ஆஜர் எதிரிகள் இருவர் மற்றும் இருவர் வந்து வாட்ச்மேனிடம் சொல்லி கேட்டை திறக்காமல் அத்துமீறி நுழைந்து போட்டோ எடுத்துள்ளார்கள். அப்போது நான் வெளியூரில் இருந்தேன். எனக்கு வாட்ச்மேன் தகவல் சொல்லி நான் செங்கோட்டை காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு **<u>அ.சா.ஆ.1</u>** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள். ப.சா.2 முருகையா, என்னிடம் வாட்ச்மேனாக வேலை செய்தார். அவர் தற்போது இறந்துவிட்டார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவ சமயத்தில் நான் ராஜபாளையத்தில் தான் இருந்தேன் என்றால் சரிதான். அதேபோல் எனது அண்ணன் பையன் கணேஷ்குமார் ராஜபாளையத்தில் தான்

இருந்தார் என்றால் சரிதான். யோவான் கூட காரில் யார் யார் வந்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். போட்டோகிராபர் வந்தார். அந்த போட்டோகிராபர் யார், அவரது ஊர் பெயர் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதேபோல் நான் புகார் மனுவிலும் யோவானை தவிர வேறு யாரையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்த மறுநாள் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எனது மரம் மில்லில் வாட்ச்மேனாக இருந்த மற்றும் பக்கத்தில் இருந்தவர்களுக்கு தான் சம்பவம் நேரடியாக தெரியும் என்றால் சரிதான். எனது சாமில்லில் எதிரி யோவான் எவ்வளவு தூரம் உள்ளே வந்தார் என்று காண்பதற்கு புகைப்படம் மற்றும் சி.சி.டி.வி. கேமரா எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. அப்போது சி.சி.டி.வி. இல்லை. வாட்ச்மேன் எவ்வளவு தூரம் அத்துமீறி உள்ளே வந்தார்கள் என்று என்னிடம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் கேட்டில் இருந்து 200 மீட்டர் உள்ளே வந்ததாக வாட்ச்மேன் சொன்னார். அவர் எதை எல்லாம் போட்டோ எடுத்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எல்லாத்தையுமே எடுத்தார். வீடு, சாமில் எல்லாத்தையும் எடுத்தார். அதனை நான் எனது புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் விசாரணையில் சொன்னேன். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், சம்பவ சமயத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் எங்களுடைய வாட்ச்மேனுக்கும், எதிரிக்கும் ஆகாததால் அவர் பொய்யாக சொல்லி அதை வைத்து நான் ஒரு பொய்யான புகார் மனு கொடுத்து அதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.11.03 15:19:22 +0530

District Munsif cum Judicial Magistrate, Shenkottai